1987 ஏப்ரல் 1]

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர அவர்களே, இந்த இன்டென்சிவ் கேர் யூனிட் ஆரம்பிப்பதற்கு என்ன வரைமுறைகளை நிர்ணயித்திருக்கிறார்கள் ? அப்படி மாவட்ட மருத்துவமனைகளிலே மட்டும்தான் இவற்றை ஆரம்பிக்க இயலுமா ? தாலுக்கா மருத்துவமனைகளிலே இந்த வசதி வருவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ? ஏனென்றால் கிராமப் பகுதி மக்கள் இப்படிப்பட்ட நோய்களால் தாக்கப்படுகின்றபொழுது அந்த மக்களுக்கு சிகிச்சை எளிதாகக் கிடைப்பதற்கு கிராம மக்கள் மீது அக்கறை கொண்டுள்ள தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவரின் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் இந்தச் சிகிச்சையை ஏற்பாடு செய்து முடித்த பிறகுதான் தாலுக்கா மருத்துவமனைகளுக்கு வர வேண்டும். இதற்காகத் தனியாக விதிகள் ஒன்றும் கிடையாது. மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் முடித்ததற்குப் பிறகு, தாலுக்கா மருத்துவமனைகளுக்கு வரலாம் என்றுதான் அரசு உத்தேசித்திருக்கிறது. தடங்கலாக இருப்பது நிதி ஆதாரமே தவிர வேறு எதுவுமில்லை.

துறையூர் அரசு மருத்துவமனையில் படுக்கைகளை அதிகரித்தல்.

235—(*வினா எண் 7005) திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் அரசு மருத்துவமனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் அவர்களே, (அ & ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் அரசு மருத்துவமனை மிகவும் பின்தங்கிய நிலைமையிலே இருக்கிறது. அங்கே நவீன அறுவை சிகிச்சை அரங்குக்கும், அதற்கடுத்தாற்போல நீரிழிவு போன்ற நோய்களை ஆராய்ச்சி செய்வதற்கு நவீன இயந்திரங்களை அங்கே பயன்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே அங்கே ஒரு அறுவை சிகிச்சை அரங்கு இருக்கிறது. சிறிய அறுவை சிகிச்சைகள் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 350 நடைபெற்று வருகின்றன. இதை விரிவுபடுத்துகின்ற யோசனை தற்போது இல்லை.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் பகுதியில் இயற்கை முறையில் மூங்கில் போன்ற பொருட்களை வைத்து கை முறிவு, கால் முறிவு ஏற்பட்டவர்களுக்கு எளிய முறையில் சிகிச்சை செய்கிறார்கள். அப்படிப்பட்ட நாட்டு வைத்தியம் என்று சொல்லக்கூடிய ஒரு முறையை இந்த அரசு மருத்துவமனைகளில் அமல்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவத்துறை என்று நாம் வைத்திருக்கிறோம். அதிலே இவற்றையெல்லாம் பரீட்சார்த்தமாக செய்து பார்க்கிறோம். அந்த மருத்துவர்கள் மூங்கிலை மட்டும் வைத்துக் கட்டுவதில்லை, சில மூலிகைகளையும் வைத்துக் கட்டுகிறார்கள். அந்த மூலிகைகளைப்பற்றி மற்றவர்களுக்கு அவர்கள் சொல்லாமல் இருந்து விடுகிறார்கள், எனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்த மருத்துவர்களைக் கொண்டு வந்து அதைப்பற்றி அரசுக்குத் தகவல் கொடுப்பார்களேயானால் பொதுவாக அது பயன்படும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் என்னுடைய தொகுதியைச் சார்ந்ததாகும். என்னுடைய தொகுதியின் தலைநகரமாக இருக்கின்றது. அந்தத் துறையூர் பகுதியிலே அதிகம்பேர் மருத்துவமனைக்கு வருகிறார்கள். எனவே, வரும் ஆண்டிலேயாவது இந்த மருத்துவமனையை விஸ்தரிப்பதற்குத் திட்டங்களை அதிகமாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரம் சரியாக இருக்கும்பொழுது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

கோவை சிங்காநெல்லூரில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை.

236—(*வினா எண். 8411) திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிங்காநெல்லூரில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் தனியார் நடத்துகிற மருத்துவக் கல்லூரி மாணவர்கள் நடைமுறைப் பயிற்சி பெற அனுமதிக்கப்படும் திட்டம் ஏதாவது உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அது அமுலாக உள்ளது?

(இ) ஈ.எஸ்.ஐ. கார்ப்பொரேஷன் அதற்கு அனுமதி அளித்துள்ளதா?